//தனி கவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 4379/ஆ4/2025 நாள்: 19.12.2025

பொருள் தேர்வுகள் –வேலூர் மாவட்டம் – 2025 – 2026–ஆம் கல்வியாண்டிற்கான இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகள் மாணவர்களுக்கு அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்கள் வழங்குதல் தொடர்பான அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகள் – பள்ளிகளுக்கு தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை 1.அரசாணை (2டி) எண்.50. பள்ளிக் கல்வி (ஜிS1)த் துறை, நாள்.09.08.2017.

2.அரசாணை (2டி) எண்.13. பள்ளிக் கல்வி (ஜிஇ1)த் துறை, நாள்.20.02.2018.

3.அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.018412 /எச்.1 /2025 நாள் 19.12.2025

..........

பார்வை 3–ல் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதங்களுகிணங்க ,வேலூர் மாவட்டத்தில் 2025 – 2026ஆம் கல்வியாண்டில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு ஒவ்வொரு பாடத்திற்கும் அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்களை கணக்கிட்டு வழங்கும் முறை பற்றிய அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது.

மேலும், பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் பள்ளியில் உள்ள அனைத்து மேல்நிலைப் பாட ஆசிரியர்களுக்கும் அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்கள் வழங்குதல் தொடர்பான அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகளின் நகலினை வழங்கி, ஆசிரியர்களின் கையொப்பத்தினை பெற்றிருக்க வேண்டும். ஆசிரியர்கள் அகமதிப்பீட்டு மதிப்பெண்கள் வழங்குவதற்கான நெறிமுறைகளைப் பற்றி பள்ளியில் +2 பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் தெரிவிக்க வேண்டும்.

எனவே மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்கள் வழங்கும் முறை, நெறிமுறைகளில் குறிப்பிட்டவாறு அனைத்து வகை பள்ளிகளும் சரியாக பின்பற்றப்படுவதை, மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை /தனியார் பள்ளிகள்) உறுதி செய்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :
அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்களை கணக்கிட்டு வழங்கும் முறை பற்றிய அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகள்

//ஒம். //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

- அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் வேலூர் மாவட்டம் (தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் பள்ளிகள்) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.